**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 322-2022**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 20.09.2025.**

| | |
|---|---|
| **Name : Chinnadurai** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குஞ்சாண்டியுரில் குடியிருந்து கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2022ம் வருடம் மாலை நேரத்தில் என் கடை முன்பாக லாரி வலது பக்கத்தில் இரு சக்கர வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். அன்றையதினம் கடை மதிய நேரத்தில் விடுமுறை என்பதால் நான் விபத்தை பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

2) கடந்த 25.09.2022 ம் தேதி மாலை 04.45 மணியளவில் நான் கடையில் இருந்தபோது KA 01 AM 2992 காரில் மேச்சேரி நோக்கி சென்றுக்கொண்டிருந்தது என்றும், லாரியின் முன்பாக செல்வதற்காக லாரியின் வலதுப்பக்கவாட்டில் TN 52 X 3674 ஜீப்பிட்டர் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றவர் அவருக்கு பின்னால் TN 54 J 3565 ஹீரோஸ்பிளண்டர்

இருச்சக்கர வண்டியில் 3 பேர் சென்றார்கள் என்றும், அப்போது மேச்சேரியிலிருந்து மேட்டூர் நோக்கி கிழக்கிலிருந்து மேற்கே TN 59 BT 7156 மாருதி ஈகோ வாகனத்தை அதிவேகமாக ஓட்டிவந்து வலதுபக்கம் சென்ற ஜீப்பிட்டர் வண்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், அதில் ஜீப்பிட்டர் வண்டி மற்றும் ஸ்பிண்டர் வண்டியை ஓட்டிவந்தவர்கள் கீழேவிழுந்துவிட்டார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. கர்நாடகா பதிவெண் கொண்ட லாரியை ஓட்டிவந்த எதிரியின் வேகத்தால் பைக்கில் பயணம் செய்த ஒரு பெண் மற்றும் பையன் மீதும் மோதி தலைமீது ஏறி இறங்கி சம்பவயிடத்தில் இறந்துவிட்டார் என்றும், இந்த சம்பவத்தை அருகிலிருந்த ஆவின் டீக்கடையில் இருந்த நானும், மற்றும் சிலரும் நேரில் பார்த்தோம் என்றும், நாங்கள் தான் உதவி செய்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கு சம்மந்தமாக 25.09.2022 ம் தேதி மேட்டூர் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி என் முன்னிலையில் தயார் செய்து அதிலுள்ள விவரங்களை படித்து காண்பித்து பிறகுதான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்காக பரிந்து சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.